மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) அங்கத்தினரின் இவ்வாலோசனை அரசினரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதேபோன்று, வடாற்காடு மாவட்டத்தில் மட்டுமல்லாமல், மாநிலத்தில் எங்கெல்லாம் சிறிய சிறிய அணைகளைக் கட்ட முடியுமோ அங்கெல்லாம் கட்டுவதன் மூலமாக, எதிர் காலத்தில் விவசாய அபிவிருத்தியும் உணவு உற்பத்திப் பெருக்கமும் ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்குமே, அந்த முறையில் சிறிய சிறிய அணைகளை கட்டக்கூடிய சாத்தியம் உள்ள எல்லா இடங்களிலும் கட்டுவதற்கு தீவிரமாக முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : உறுப்பினரைப் போலவே அரசுக்கும் அந்த ஆசை இருக்கிறது. ஆனால், பாத்திரத்திலேதான் பண்டம் குறைவாக இருக்கிறது.

Bridges

*284 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the shaky condition of the bridge in the Nagercoil-Manavalakurichi road near Kannakurichi ;

(*b*) whether the Government have received memoranda from the public of Kannakurichi about the deplorable condition of this bridge ; and

(*c*) if so, when the work of reconstruction will be started ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) கண்ணக்குறிச்சி அருகில் நாகர்கோயில்-ராஜக்கமங்கலம் கொளச்சல் சாலையில் 7/6 மைலில் உள்ள கட்டுமான அமைப்பு ஒரு மதகாகும். அது பாலமன்று. அது நன்னிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ) மழைக்காலத்தில் இதன் கரையிலுள்ள அணுகுவழிகள் அரிக்கப்பட்டன ; பாதுகாப்பு வேலைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கோரி தல வட்டாரப் பொறியாளருக்கு முறையீடுகள் வந்துள்ளன.

(உ) மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டும் தழைச் செடிகள் வளர்ப்பதன் மூலமும் அணுகுவழிகள் தற்போதைக்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. ரூ. 4,700 மதிப்பீட்டுச் செலவில் தகுந்த தடுப்புச் சுவரும் பற்றுச் சுவரும் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதகைப் புதுப்பிப்பதற்கு உடனடியான தேவை இல்லை.

திரு. ஏ. முனியாண்டி : பேரணையிலே கட்டப்பட்ட பாலம் போக்குவரத்துக்கு வசதியற்றதாக இருப்பதால், அதை போக்குவரத்துக்கு வசதியாகக் கட்ட அரசுக்கு யோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தொடக்கக் கேள்வி கன்யாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தது.

* 285 வினா.—திரு. இல. பலராமன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆரணி தாலுக்காவில் குன்னத்தூர் to அய்யம்பாளையம் நெடுஞ்சாலையில் கீழ்நகர் அருகாமையில் நாகநதியின் குறுக்கே மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?